# இயல் 9.1 : ஆசியஜோதி

## அ) குறு வினா

1. **அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?**

விடை: வாழ்கின்ற உயிர்களை அழிப்பது இந்த உலகத்தில் எல்லோர்க்கும் எளிய செயல். ஆனால், இறந்த உடலுக்கு உயிரைக் கொடுத்து எழுப்புவது மன்னனாலும் முடியாத செயல்.

2. **எறும்பு எதற்காகப் பாடுபடுகிறது?**

விடை: எல்லா உயிர்களும் தம் உயிரைப் பெரிதாக மதித்து பாதுகாப்பது போல எறும்பும் தன் உயிரைக் காக்கப் பாடுபடுகிறது.

3. **ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?**

விடை: ஒருவர் செய்த நன்மையும் தீமையும் ஒருநாளும் அவரை விட்டுச் செல்லாது.

4. **உலகம் முழுமையையும் எப்போது ஆள முடியும்?**

விடை: நல்ல மனம் கொண்டிருப்பவரால் மட்டுமே பரந்த இவ்வுலகம் முழுமையும் இரக்கத்தால் ஆட்சி செய்ய முடியும்.